# 9B செயல்முறைப் பகுதி

## 1. பிறந்த நாட்டுப் பண்பாட்டுடன் தொடர்புற்ற தலைப்புகளில் கற்றல் திட்டம்

(இயல்கள் 11 B.4, 11 B.5 ஐயும் பார்க்கவும்)

### சில்வியா இவனோவா பொப்போவா: இடைநிலைப் பள்ளிக்கு இருபருவத் திட்டமிடல் (வகுப்பு 4 – 6): கருப்பொருள், பல்கேரியன் மொழி, வரலாறு மற்றும் விழாக்கள்.

சில்வியா இவனோவா பொப்போவா பல்கேரியாவைச் சேர்ந்தவர். அவர் சூரிச்சில் 13 ஆண்டுகள் வாழ்ந்து வந்தவர். அவர் 9 ஆண்டுகளாக பல்கேரியன் பா.மொ.க ஆசிரியராகப் பணியாற்றியவர்.

| இலக்கணம் | மனித இனமும் சூழலும் | விழாக்கள் |
|---|---|---|
| வினைகள்: வெவ்வேறு இறந்த காலங்கள் | வரலாறு: த்ராக்கர், ஸ்லாவ்ஸ் மற்றும் தொல் பல்கேரியன் | மார்ச் முதல்நாள் "பபா மார்த்தா" நமக்கு மார்-த்தெனிசி கொண்டுவரும். நாம் நம்முடைய மார்த்தெனிசியை செய்வோம். (சிவப்பு வெள்ளை நிற நூல்களை பல்வேறு வகையில் முறுக்கி உங்கள் கையில் கட்டவும். இது உடல்நலம், அன்பு, புதுப்பித்தல் ஆகியவற்றின் குறியீடாகும்) – மார்த்தெனிக்கா புராணக்கதையைக் கற்றறிக.<br>அன்னையர் நாள் மற்றும் பெண்கள் நாள் – மார்ச் 8<br>பனை ஞாயிறு – ஒரு பூவின் பெயரால் அழைக்கப்படும் மக்களுக்கான ஒரு நாளைப் பெயரிடுக.<br>ஈஸ்ரர் – உயிர்த்தெழுதல் – சிறப்பு வாழ்த்து. |
| எதிர்கால வினைகள் | சான் அஸ்பருச் - பல்கேரியாவை உருவாக்கியவர் (681) | |
| வினை எச்சம் | புதிய பல்கேரியன் நாட்டின் விரிவாக்கமும் ஒருங்கிணைப்பும்<br>(சான் ஒமுர்ராக், தெர்வெல், ப்ரெசியன், க்ரும்) | |
| முதன்மை மற்றும் சிறுபிரிவுத் தொடர்கள், காற்புள்ளி விதிகள் | கிறிஸ்தவம் தம் சமயமாக: அடையாளம் - Knjas Boris I - 866 | |
| நேரடியான - மறைமுகமான பேச்சுகள்<br>குறியீடுகள் | பல்கேரியா வலுமிக்க பெரிய நாடாக<br>ஜார் சிமியோன் I (893-927) மூன்று கடல்களில் பல்கேரியாவின் எல்லைகள் - பண்பாடு மற்றும் அறிவுப் பொற்காலம் | |
| மறைமுகமான பேச்சுகள் | பல்கேரியாவில் போரும் வீரமும் | மே 6 – இடையர்கள் நாள் மற்றும் புனித ஜேரர்ஜின் நாள் |
| கட்டுரை எழுதுதல்: விதிகளும் கட்டமைப்பும் | 855 தொடக்கம் பல்கேரியன் நெடுங்கணக்கு – கைறில் மற்றும் மெதோடுஸ் அவர்களின் மாணவர்களான (க்ளிமென்ற், கொறாஸ்ற், முதலியோர்) | மே 24 – ஸ்லாவிக் நெடுங்கணக்கு, பண்பாட்டு நாள், நாட்டார் நடன விழா |
| தரப்பட்ட தொடக்கம் பற்றி கட்டுரை எழுதுக.<br>குறுகிய சொற்றொடரைத் தொடர்வதற்கான பயிற்சிகள் | எழுச்சி ஆண்டுகள்<br>தன்னாட்சிக்கான போராட்டம்<br>பைசன்ரைன் ஆட்சிக்குக் கீழ் | ஜுன் 14 "றொட்னா றெற்ஷ்" கழகத்தின் 10ஆவது நிறைவு ஆண்டு |
| விளிப்பு வடிவங்கள்<br>குறிப்பட்ட முடிவுகள்<br>அஞ்சல் எழுதுதல் | பைசன்ரைன் ஆட்சியிலிருந்து விடுதலை 1185<br>ஜார் இவான்-அஸென் I & பீற்றர் II | பல்கேரியாவுக்கு சுற்றுலா<br>நாங்கள் எங்கள் வரலாற்றில் இன்றியமையாத வகிபங்காற்றிய 4 நகரங்களுக்கு, விடுதலையின் குறியீடான மலைகளிலுள்ள சிறப்பு நினைவுச்சின்னம். |
| முன்னரே தீர்மானிக்கப்பட்ட தலைப்பில் கட்டுரை எழுதுதல்<br>நடை, இலக்கணம், எழுத்துக்கூட்டல் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றில் கண்காணிப்புச் செலுத்துக | ஜார் கலோஜன் (1190 – 1207)<br>ஜார் இவான்-அஸென் II & பீற்றர் II<br>இராஜதந்திரம் மற்றும் வலுவுள்ள அரச மனையூடாக பல்கேரியன் ஆட்சிக்குத் திரும்புக. | |

## 2. புதியநாட்டு வாழ்வுடன் தொடர்புற்ற தலைப்புகளில் கற்றல் திட்டம்: "இரண்டு மொழிகளுக்குள், மொழிகளுடன், மொழிகளுக்கிடையே வாழ்தல்"

இக்கூற்றின் மிக உன்னதமான எடுத்துக்காட்டுகள் இக் கைநூலின் பல்வேறு இயல்களில் காணலாம். சிறப்பாகப் பின்வருவனவற்றை இங்கு நாம் மேற்கோளிடுகிறோம்:

**அத்தியாயம் 6 B.1**

(ஆன்ஸ்பேக் / ஜெர்மனியிலுள்ள அல்பானியன் பா.மொ.க ) வகுப்பு 5-10 மாணவர்களுக்கான இரட்டைப் பாடவேளை "நட்பு, முன்கூட்டியுணர்வு, இணைந்த வாழ்க்கை"

"நட்பு, முன்கூட்டியுணர்வு, இணைந்த வாழ்க்கை" எனும் இடப்பெயர்வு வட்டத்தின் பரபரப்பான பிரச்சினை எவ்வாறு வழிகாட்டல், சமூகம் மற்றும் தொடர்பு வடிவங்களில் ஈடுபடும் முறையில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். புதிய நாட்டில் மாணவர்களின் உண்மையான பட்டறிவுகளே தலைப்பின் மையமாகும். பிறப்புப் பண்பாட்டு குறிப்புக்கள் பெரும்பாலும் இறுதிக் கலந்துரையாடல்களிலேயே எடுக்கப்பட்டன. மேலும் அதிக பயன்மிக்க ஆழ்ந்த பகுப்பாய்வை நிச்சயமாக அடுத்து வரும் பாடத்திலே மேற்கொள்ள முடியும்.

**அத்தியாயம் 5 B.3**

Gaca Radetinac (HLT கார்ள்ஸ்குரோனா / சுவீடனில் பொஸ்னியன் / சேர்பியன் / குரோசியன் பா.மொ.க ): "பிள்ளைகளின் உரிமைகள்" எனும் கருப்பொருளுடன் கூடிய இரட்டைப் பாடம்.

ஆசிரியர் சிறுவர் உரிமைகள் எனும் தலைப்பை செயற்பாடு சார்ந்ததாகவும் விளக்கமுறையாகவும் பயன்படுத்துகிறார். பால்நிலை பற்றிய கேள்வியை உள்ளடக்கிய பின்வரும் நெஹ்மியே மெஹ்மதாஜின் கருத்திட்ட ஆய்விலுள்ளது போல், சிறுவர் உரிமைகள் எனும் தலைப்பு பாடத் திட்டத்தினூடாக மேலதிக ஆய்வுகளை வரவேற்கிறது, அல்லது மேலும் தொடர் தேர்ச்சியாக படிப்பினை வேறுபாடுகளிலும் ஒப்புமைகளிலும், பிறந்த நாட்டு மற்றும் புதிய நாட்டிலும் பண்பாட்டில் சிறுவர் உரிமைகளின் நன்மைகள் தீமைகள் மீதும், அத்துடன், குடிபுகு சூழலில் (குடும்பத்தில் பிள்ளைகளின் நிலைப்பாடு, கட்டற்ற நிலைகள், உரிமைகள் கடமைகள் தாத்தா பாட்டி மற்றும் பெற்றோர்களின் சிறு பிராயத்தில் இருந்த சாத்தியத்தன்மை மீதான பின் நோக்கிய பார்வையுடன்) சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகள் தொடர்பான கேள்விகளிலும், ஒற்றுமை வேற்றுமைகள் மீதும், தொடர்ச்சியாக இப் படிப்பினை கவனம் செலுத்துகின்றது.

**அத்தியாயம் 4 B.2**

நெஹ்மியே மெஹ்மதாஜ் (பிரெஞ்ச் மொழி பேசும் சுவிற்ஸர்லாந்தில் அல்பானியன் பா.மொ.க ): பால்நிலை, சமத்துவம் / பால்நிலை என்னும் தலைப்பில், வயது மற்றும் திறமையுடன் தொடர்புடைய மூன்று மட்டங்களில் வடிவமைக்கப்பட்ட இரட்டைப் பாடம்.

அகவை மற்றும் திறமை தொடர்பான மூன்று குழுக்களுடைய வகுப்பில் பால்நிலை சமத்துவம் என்னும் தலைப்பு எவ்வாறு கையாளப்படலாம் என்பதை ஆசிரியர் தன்னுடைய திட்டத்தில் காட்டுகிறார். அதில் ஒவ்வொரு குழுவும் அகவை தொடர்பான அணுகலைக் கண்டறிகிறது (கீழ்ப்பிரிவு: பெண்கள்கூட காற்பந்து விளையாடுகின்றனர் இடை நிலைப்பிரிவு: எமது வகுப்பில் ஆண் மற்றும் பெண்களுக்குள்ள உரிமைகளும் கடமைகளும் மேற்பிரிவு: சிறுவர் உரிமைகள்). இது மேலதிக உருக்காட்டல்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் பாடத்தில் இணைக்கப்பட்டதாக அல்லது பின்னர் வரும் பாடத்தில் ஒரு தலைப்பாக முன்னெடுத்து செல்லலாம் செல்லவேண்டும். வேறுபட்ட வகிபாக வகுப்பீடு, நடத்தைக் கோலங்கள், பிறப்பு நாட்டுப் பண்பாடு மற்றும் புதிய நாட்டின் பண்பாடுகளில் ஒரே மாதிரியான தோற்றம் என்பன எவ்வாறு பிரச்சினைகளுக்கு அல்லது முரண்பாடுகளுக்கு இட்டுச்செல்லும்.

---

## 3. பிறந்த நாட்டுப் பண்பாடு மற்றும் புதிய நாட்டின் பண்பாடு ஆகியவை தொடர்பான கற்றல் தலைப்பு திட்டமிடல்

### ட்ராக்னா டிமிற்றியேவிச்: "குடும்பம்" எனும் தலைப்பில் இரட்டைப் பாடவேளையில் மேற்கோள்பகுதி, இது மேற்பிரிவு (வகுப்பு 7 – 8 சமூக வடிவம் மற்றும் ஊடகம் என்னும் தலைப்புகள் கொண்டிராத எளிமைப்படுத்தப்பட்ட உருவமைப்பு)

ட்ராக்னா டிமிற்றியேவிச் பெல்கிறேட் / சேர்பியாவைச் சேர்ந்தவர். 1999 தொடக்கம் சூரிச் மாநிலத்தில் பா.மொ.க வின் சேர்பியன் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இன்றியமையாதது: இப்பாடத்தினை ஆக்குதற்கான வீட்டுவேலை ஒப்படையாக, மாணவர்கள் தங்கள் வீட்டில் அவர்களின் குடும்பங்கள் கடைசி மற்றும் அதற்கு முன்னான பரம்பரைகள் எவ்வளவு பெரியது, அவற்றில் சில உறவினர்கள் என்ன வகிபாகங்களைக் கொண்டுள்ளனர் / கொண்டிருந்தனர் (கல்வி, உறவு முறை, உடைகள், பெண் உரிமைகள். பள்ளியின் முதல் நாள், மொழிகள், விளையாட்டுகள், விளையாட்டுப் பொருட்கள், புலம்பெயர்வுக்கான காரணங்கள்…) என்பன பற்றி தாமே முன்னரே தெரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

III

| நேரம் | இலக்கை எதற்காக விவரித்தல்? கற்றல் படி முறைகளும் துணை இலக்குகளும் | என்ன மற்றும் எவ்வாறு? ஆசிரியரால் செயற்படுத்தப்படுவது: | என்ன மற்றும் எவ்வாறு? மாணவர்களினால் செயற்படுத்தப்படுவது |
|---|---|---|---|
| | **1.** | **1.** | **1.** |
| 7ʹ | குடும்பம்<br>பிறப்பு நாடு மற்றும் சுவிற்சர்லாந்தின் வாழ்க்கைச் சூழலின் தகவல் ஒப்பீடுகளை மாணவர்கள் நடத்தி, திறந்த மனப்பான்மை உணர்வை மேம்படுத்தலாம். பிறப்பு நாடு மற்றும் சுவிற்சர்லாந்தில் குடும்பப்பட்டறிவு மனங்கொள் தேர்வினூடாக, அவர்கள் சமூக சூழலின் பன்முகத் தன்மை தொடர்பாடல்கள் பற்றிய நுண்ணறிவைப் பெறுவார்கள்.<br><br>இலக்கு: வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சூழலில் குடும்பத்தின் செயற்பாடுகள் மற்றும் வடிவங்கள் பற்றிக் கற்கவும். | பகிர்தல்<br>மாணவர்களுக்கு "சுவிற்சர்லாந்தில் குடும்பம்" எனும் தலைப்புடைய பாடத்திலிருந்து (ஜெர்மனில் உள்ள) பெறப்பட்ட மேற்கோள் பகுதிகள் மாணவர்களுக்குப் பகிரப்படுகிறது.<br><br>• பிற நாட்டுச் சொற்களை விளங்கப் படுத்தல் மற்றும் வாசிப்பு ஒப்படைகளை வழங்கல். (இலக்குப் படிப்பு): எழுத் துருவைப் படித்து மிகவும் இன்றி யமையாத தகவலைச் (ஆட்கள், குடும்ப அளவு, உறவு முறைகள், இடம், நடவடிக்கை நேரம்) சேர்க்கவும். | முறைமை<br>வீட்டு ஒப்படையை மேலும் செயலாக்குதல் (மேலே பார்க்கவும்)<br><br>• "80ற்கு அப்பால் வாழ்க்கை" எனும் நூலிலிருந்து மேற்கோள்களைப் படித்தல்<br>• முன்னரே ஆக்கிய வினாக்களின் துணையுடன் எழுத்துருவின் கருப் பொருளை மனங்கொள்க.<br>• மிகவும் இன்றியமையாத தகவல்களைத் திரட்டவும் |
| | **2.** | **2.** | **2.** |
| 10ʹ | மாணவர்கள் விளங்கிக்கொள்ளலும் பெயரிடலும்<br><br>ஓர் எழுத்துரு ஊடாக ஓர் ஆள் பற்றிய இன்றியமையாத தகவல்கள் (அவன் / அவளது குடும்பம், மொழித் திறன்கள், கல்வி, குடும்ப உறவு முறைகள், தனி ஆளின் வகிபங்கு, குடிபெயர்வுக்கான காரணம்). | விளக்கங்கள்<br><br>பாடம் பற்றிய கேள்விகளை விளக்குகின்றது. மாணவர்களிடம் வினாக்கள் தொடுத்தல்,<br>எடுத்துக்காட்டு: அவர்களது தந்தை / தாத்தா எங்குள்ளவர்கள்? ஏன்? அவருக்கு எத்தனை பிள்ளைகள்? என்ன மொழியில் அவர் உரையாடுகிறார்? | பரிமாற்றம்<br><br>கதையிலிருந்து திரட்டப்பட்ட விபரங்களை மையமாகக் கொண்ட இன்றியமையாத் தகவல்களை பரிமாற்றம் செய்தல். |
| | **3.** | **3.** | **3.** |
| 20ʹ | உறவு முறைமை<br><br>குடும்பத்தின் உறவு முறைமை (செர்பியா, சுவிற்சர்லாந்து) ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.<br><br>• "சுவிற்சர்லாந்திலுள்ள குடும்பம் (அளவு, வகிபாகம், உறவு முறைகள், கிரிை- யகள்".) புரிந்துணர்வு மற்றும் விளங்க- ிக் கொள்ளல்.<br>• "சேர்பியாவிலுள்ள குடும்பம் (அளவு, வகிபாகம், உறவு முறைகள், கிரியைகள்".) புரிந்துணர்வு மற்றும் விளங்கிக்கொள்ளல்.<br>• பொதுமைகளையும் வேறுபாடுகளையும் இனங்கண்டு கலந்துரையாடவும்.<br><br>மாணவர்கள் சுவிற்சர்லாந்திலும் சேர்பியாவிலும் உள்ள குடும்பங்களின் செயற்பாடுகளையும் வடிவங்களையும் விவரிப்பர். | செயன் முறைகள்<br><br>ஒப்படையை மேலும் செயலாக்குதல் (மேலே பார்க்கவும்)<br><br>• குழுக்களைத் தெரிவு செய்தல்.<br>• கலந்துரையாடலை ஒருங்கிணைத்தல்<br>• குழுவுக்கு ஒப்படை: சுவிற்சர்லாந்திலும் சேர்பியாவிலும் உள்ள குடும்பங்கள் பற்றித் திரட்டப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்து பார்த்தல் | பேசுதல்<br><br>என்ன கண்டுபிடிக்கப்பட்டது என்னும் வினாவை அடிப்படையாகக் கொண்டு பேசுக, கலந்துரையாடுக, விளங்கப்படுத்துக. |
| | **4.** | **4.** | **4.** |
| 8ʹ | விவரித்தல்<br>தங்கள் வகிபாகம் தங்கள் குடும்பம்: தங்கள் குடும்பத்தில் (சுவிற்சர்லாந்து மற்றும் சேர்பியா) மாணவர்களின் வகிபாகம். | மாணவர்களைக் குழுக்களுக்கு வகுத்தல்<br><br>பணி: (சேர்பியா மற்றும் சுவிற்சர்லாந்திலுள்ள அவர்களது குடும்பத்தில் அவர்களின் வகிபாகம் பற்றி விவரித்தல். | விளக்குதல்<br><br>செர்பியா மற்றும் சுவிற்சர்லாந்திலுள்ள அவர்களது குடும்பத்தில் உள்ள அவர்களது வகிபாகம் பற்றி விளக்குதல் திரட்டப்பட்ட தகவல்களின் ஊடாக அவர்களது சொந்த கதைகளைச் சொல்லுக. |

4B.3 லுள்ள அரி∴பா மாலிக், இலண்டன். "பல்பண்பாட்டியம்" கோட்பாடு, எடுத்துக்காட்டு "நிறங்கள்") பாட அலகு விவரணங்களையும் 6B.2 உடன் (சக்கினே கொச், சூரிச்: "விழாக்களும் விடுமுறைகளும்" என்னும் தலைப்பிலுள்ள பாட அலகு) ஒப்பிடுக.


## 4. பிறந்த நாட்டுப் பண்பாடு பற்றியோ புதிய நாட்டின் பண்பாடு பற்றியோ குறிப்புகள் இல்லாமல் கற்றல் தலைப்புகளைத் திட்டமிடல்

தொடக்கக் கருத்துக்கள்: பண்பாடு தொர்பான குறிப்புகள் இல்லாத தலைப்புகள் இப்பிரிவைச் சேர்ந்தன (காலநிலை, மலர்கள், விலங்குகள், இயற்கை முதலியன) கொண்டிராத தலைப்புக்களே இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இது பிறப்பு நாட்டு அல்லது புதிய நாட்டின் பண்பாட்டுடன் மிக எளிமையாகத் தொடர்புறுத்தலாம்.

### மரியானா வக்கெட்: "மிருகங்கள் மற்றும் இயற்கை" (வேறுபட்ட தேர்ச்சி மட்டங்கள் மற்றும் வயதைக்கொண்ட 3 பிரிவுக்குழுக்களுக்கான 6 பாடங்கள்) என்னும் தலைப்பில் தொடர்ச்சியான கற்பித்தல் அலகுகளைத் திட்டமிடல்

மரியானா வக்கெட் லெபனானைச் சேர்ந்தவர். அங்கு அவர் அரபிக் ஆசிரியராகப் பணியாற்றியவர். அவர் காரள்ஸ்குறோனா / சுவீடனில் 14 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார், 4 ஆண்டுகளாக அரபிக் பா.மொ.க ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

"குதிரை" (குணங்கள், உணவு, வாழ்விடம்) என்னும் தலைப்புக்கான அரபிக் மனப்படம்.




| | இலக்கு | கீழ்ப்பிரிவு | மத்திய பிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|---|---|
| பாட அலகு **1** | எடுத்துரைப்பு | பல்வேறுபட்ட மிருகங்களைக் கொண்ட கதை ஒன்றை செவிமடுத்தல். அதைப்பற்றி பேசுதல் மற்றும் அதே கதையை மீண்டும் கூறல். | ஆவணப்படம் ஒன்றைப் பார்த்து குறிப்பெடுத்துக்கொள்க. தனிப்பட்ட விலங்குகள் பற்றி நாம் என்ன கற்றோம் என்பதை நினைவு படுத்துக. | சில விலங்குகள் பற்றிய உண்மைத் தகவல்களை படித்தல் அல்லது கேட்டல். தனிப்பட்ட குறிப்புக்களை எடுத்துக்கொள்க. |
| பாட அலகு **2** | வேறுபட்ட விலங்குகளின் பாகுபாடு | பொருட்களுடன் கூடிய தர்க்க முறையானயான பயிற்சிகள். விலங்குகளை அவற்றின் உணவை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துக. படங்களின் துணையுடன் சொற்களைப் படித்தல். தனிப்பட்ட விலங்குகளின் பெயர்களின் முதலெழுத்துகளை எழுதுதல். விலங்குகளை வரைக. | உணவு, வாழ்விடம், இனப்பெருக்க முறைகள் என்பவற்றுக்கிணங்க விலங்குகளை வகைப்படுத்துக.<br><br>விலங்குகளின் புவியியற் பகிர்வு வரைப்படத்தை விளக்கிக் கருத்துக்கூறுக. | ஒரே சூழலில் வாழும் விலங்குகளின் பொதுவான பண்புக்கூறுகளைக் கொண்ட பட்டியலை உருவாக்குக. (உடல் பண்புகள், உணவு, இனப்பெருக்கம், சூழல் மற்றும் பண்புக்கூறுகளுக்கு இடையில் உள்ள உறவுமுறைகளை இனங்காண்க.) |
| பாட அலகு **3** | பண்ணை விலங்குகள் | பண்ணை ஒன்றைப் பார்வையிடல். அவதானிப்புக்களும் கலந்துரையாடல்களும். | பண்ணை ஒன்றை பார்வையிடல். ஒரு நேர்காணல் பட ஆவணப்படுத்தல் முடிந்த அளவு காணொளிகளாக ஏற்பாடு செய்க. | பண்ணை ஒன்றைப் பார்வையிடல். சுவீடனில் குடும்பத்தின் ஓர் உறுப்பினர் போல செல்லப்பிராணி காணப்படுவது வழக்கமாகும். எமது பிறப்பு நாடுகளுடன் ஒப்பிடும்போது இது எப்படி இருக்கும்? சிக்கலைக் கலந்துரையாடுக. உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன? |
| பாட அலகு **4** | பண்ணைக்குச் சுற்றுலாவைச் செயற்படுத்தலும் பின்னிகழ்வுகளும் | குழுக்களை நிறுவி பண்ணை யிலுள்ள மிருகங்கள் தொடர்பான பல்வேறுபட்ட செயற்பாடுகளை உருவாக்கல். (பணித்தாள்கள், வினாவிடை, புதிர்...)<br>மிருகங்கள் பற்றிய பாடல்களைக் கற்றல். | பிறந்த நாட்டில் உள்ள ஒருவருக்கு உங்களது பண்ணை பார்வையிடல் பற்றி ஓர் அஞ்சல் எழுதுக. | பண்ணையில் வாழும் ஒரு விலங்கு பற்றிய தன்வரலாற்றை உருவாக்குக. தகவல்களுக்கு நூலக மற்றும் இணையத் தளத்தைப் பயன்படுத்தவும். |
| பாட அலகு **5** | மன வரைபடம் | பண்ணையிலுள்ள 2-3 வரையிலான விலங்குகள் பற்றிய ஒரு கதையை உருவாக்கி, அதனை ஆசிரியரின் துணையுடன் எழுதவும். அதை நீங்களாகவே விளக்குங்கள். | தெரிவு செய்யப்பட்ட ஒரு விலங்கு பற்றிய மன வரைபடம் ஒன்றை உருவாக்குக. இந்த விலங்கு பற்றிய ஓர் உண்மை கட்டுரையை எழுத வேண்டிய அனைத்தினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். | அழிவை நோக்கிய பேரிடருடைய ஓர் இனத்தைத் தெரிவுசெய்க. நாம் எவ்வாறு விலங்குகளுக்குத் துணை செய்யலாம் என்பதைக் கருத்திற் கொள்க. மன வரைபடம் ஒன்றை உருவாக்கி அச் சிக்கல் பற்றி ஓர் கட்டுரை எழுதுக. |
| பாட அலகு **6** | எடுத்துரைப்பு, கண்காட்சி | பாடஅலகு 5 இல் உள்ள உரைப்பகுதிகளைப் படித்தலும் எடுத்துரைப்பும் | பாட அலகு 5 இல உள்ள உண்மையான உரைப்பகுதிகளை எடுத்துரைத்தலும் கலந்துரையாடலும். | பாட அலகு 5 இல் உள்ள உண்மையான உரைப்பகுதிகளை எடுத்துரைத்தலும் கலந்துரையாடலும். |

III